**கொடகவெல பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

## 01. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 26 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 18 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஜுன் 22 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கொடகவெல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இரத்தினபுரி காணிப் பதிவாளர் அலுவலகத்தில் இருந்து கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 2,968,488 தொகையில் டயர்கள் கொள்வனவு செய்தல் தொடர்பாக சப்ரகமுவ மாகாண சபையின் அபிவிருத்தி வடிவமைப்பு மற்றும் இயந்திர உபகரண அதிகாரச சபைக்கு செலுத்த வேண்டிய ரூபா 147,439 கடன்கொடுத்தோர் மீதியை கழித்த பின்னர் ரூபா 2,821,049 இற்கான தேறிய பெறுமதியை மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான முத்திரைக் கட்டணம் மதிப்பீட்டு வருமானம் ஆகிய ரூபா 6,000,000 தொகையினை கணக்கீடு செய்திருந்தது. எம்பிலிபிட்டிய காணிப் பதிவாளர் அலுவலகத்திலிருந்து மாத்திரம் 2015 ஆம் ஆண்டிற்காக ரூபா 5,970,650 இற்கான வருமானமொன்று பட்டோலைகளின் பிரகாரம் இனங்காணப்பட்டிருந்தது. இரத்தினபுரி காணிப் பதிவாளர் அலுவலகத்தில் இருந்தும் முத்திரைக் கட்டண வருமானம் கிடைப்பதினால் ஆண்டிற்கான சிட்டையிடப்பட்ட முத்திரைக் கட்டணம் குறைவாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(இ) களஞ்சியப் பண்டங்கள் மற்றும் வகை இருப்புக்கள் கொள்வனவு செய்யும் போது தொக்கு கட்டுப்பாட்டு கணக்கு ஒன்றின் மூலம் கணக்கீடு செய்யாமல் கொள்வனவு செய்யும் இருப்பின் மொத்தப் பெறுமதியை செலவுக் கணக்கிற்கு வரவு வைத்த பின்னர் இருப்புக் கணக்கிற்கு மாற்றும் பிழையான கணக்கீட்டு முறை ஒன்று பயன்படுத்தப்பட்டுள்ளது.

(ஈ) மீளாய்வாண்டு மே மாதம் 15 ஆந் திகதி கழைக்கப்பட்ட பிரதேச சபையின் மந்திரிமாருக்காக மாதத்திற்கான மந்திரிமார் படியாக ரூபா 220,000 செலுத்தியிருந்த போதிலும், அவற்றில் அவர்களுக்கு உரித்துள்ள 15 நாட்களுக்கான சம்பளம் ரூபா 110,000 மாத்திரமே. சம்பளச் செலவுகள் ரூபா 110,000 இனால் மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் மந்திரிமார்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 110,000 தொகை கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

பொது நிருவாக மற்றும் உள்நாட்டு விவகார அமைச்சுச் செயலாளரின் 2014 நவம்பர் 12 திகதிய 25/2014 ஆம் இலக்க மற்றும் சப்ரகமுவ மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளரின் 2014 நவம்பர் 18 திகதி சப்ரகமுவ மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 22/2014 இலக்க குறிப்பிட்ட சுற்றறிக்கைகளின் பிரகாரம் 2014 அக்தோபர் 24 திகதியில் உள்ளவாறு தொடர்ச்சியாக 180 நாட்கள் திருப்திகரமாக சேவை ஒன்றினை ஆற்றிய நபர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும், பிரதேச சபையின் தலைமை அலுவலகம், வர்த்தக செயற்திட்டங்கள் மற்றும் இரக்குவானை உப அலுவலகத்தைச் சேர்ந்த அமைய மற்றும் தற்காலிக உத்தியோகத்தர்களின் சம்பள அறிக்கையின் பிரகாரம் 180 நாட்கள் பூர்த்தி செய்திருக்காத 07 ஊழியர்களுக்கு நிரந்தர பதவிகள் வழங்கப்பட்டிருந்தது. அத்துடன் 180 நாட்கள் பூர்த்தி செய்திருந்த மூன்று ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 8,932,743 ஆகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 9,779,362 ஆகும்.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி செயற்பாட்டு மிகை ரூபா 846,619 இனால் குறைந்திருந்ததுடன், அது முன்னைய ஆண்டை விட 8.65 சதவீதத்தினால் குறைவடைதல் ஆகும். இதற்கு முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது மீண்டுவரும் வருமானங்களில் குறைவடைதலும் மற்றும் மீண்டுவரும் செலவுகள் அதிகரித்தலும் முக்கியமாக தாக்கியிருந்தது.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பீட்டு | உள்ளவாறான | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| வீத வரி மற்றும் வரி | 2,861 | 3,136 | 727 |
| வாடகை | 8,183 | 6,274 | 225 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,054 | 988 | - |
| ஏனைய வருமானங்கள் | 41,831 | 44,924 | 13,264 |

### 2.3.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டு வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் இணக்கஞ் செய்யும் போது வாடகை வருமானம், சேவைக்கான கட்டணம், எழுத்தாணை மற்றும் தண்டம் மற்றும் ஏனைய வருமானங்கள் ஆகிய வருமான விடயங்கள் சேகரிக்கப்பட்ட வருமானம் பாதீட்டு தொகையை விட முறையே 28 சதவீதம், 2.5 சதவீதம், 48 சதவீதம், 20 சதவீதம் குறைவடைதல் ஒன்றினைக் காட்டுகின்றது.

### 2.3.3 வீத வரி

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 611,154 ஆகக் காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 5,000 தொகையை விட நிலுவை காணப்பட்ட 07 வீத வரி அலகுகளில் இருந்து ரூபா 173,426 தொகை என மொத்த நிலுவைப் பெறுமதியில் 28% சதவீதம் மாத்திரமே.

### 2.3.4 வியாபார வரி மற்றும் அனுமதிப் பத்திரக் கட்டணம்

2014 ஆண்டிற்கு ஒப்பாக 2015 ஆண்டு திசெம்பர் வரை வியாபார, அனுமதிப்பத்திரத்தின் வர்த்தக வரி அறவிடப்பட வேண்டிய 206 நிறுவனங்களில் இருந்து வியாபார வரி மற்றும் வர்த்தக அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாமையின் காரணமாக சபை நிதியத்தில் ரூபா 17,460 தொகையினை இழக்கும் ஆபத்து நிலை காணப்பட்டது. இதன் பிரகாரம் பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் வர்த்தக நியைங்கள், உற்பத்தி வியாபாரங்கள், கைத்தொழில்கள், ஹோட்டல்கள் சிற்றுண்டிச் சாலைகள் என்பவற்றினை கணிப்பீடு ஒன்று மேற்கொண்டு இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் அறவிடப்படக் கூடிய பாரிய வருமானம் ஒன்றினை சபை இழக்கும் நிலைமை ஏற்பட்டிருந்தது.

### 2.3.5 ஏக்கர் வரி

பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை ஏக்கர் வரி மீதி ரூபா 98,251 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 1,000 இனை விட கூடிய நிலுவை காணப்படும் 20 ஏக்கர் வரி அலகுகளில் இருந்து ரூபா 44,092 தொகை என மொத்த நிலுவை பெறுமதியில் சுமார் 45 சதவீதம் ஆகும்.

### 2.3.6 ஏனைய வருமானங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்ளூராட்சி ஆணையாளரின் 2009 மார்ச் 09 திகதிய 2009/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் கடையினை வாடகைக்கு கொடுத்த தொகை தொடர்ந்து வரும் வருடத்தின் குறைந்த விலைகூறல் என கணித்து வாடகைக்கு கொடுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும் அது தொடர்பாக கவனம் செலுத்தாமல் கொடகவெல வாராந்த சந்தையின் 03 ஆம் இலக்க மீன் பலகை மற்றும் 05 ஆம் இலக்க மீன் பலகை 2014 ஆண்டிற்கு ஒப்பாக 2015 ஆண்டின் போது முறையே ரூபா 86,041 தொகை மற்றும் ரூபா 234,122 தொகை குறைவாக ரூபா 122,300 மற்றும் ரூபா 121,378 தொகை என தீர்மானித்து வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக வாடகைத் தொகையிடையே போட்டி ஏற்படுத்தி வாடகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையால் 2014 ஆண்டிற்கு ஒப்பாக 2015 ஆண்டின் போது சபைக்கு ரூபா 320,163 இற்கான நிதி நட்டம் ஒன்று ஏற்பட்டிருந்தது.

(ஆ)(i) கொடகவெல வாராந்த சந்தையின் 02 ஆம் இலக்க மீன் பலகையின் வருடாந்த வாடகை ரூபா 303,220 தொகை என தீர்மானித்து கேள்வி கோரப்பட்டிருந்த போதிலும் கேள்வி விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படாமையால் 2015 ஆண்டிற்கான வாடகை கொடுத்திருக்கவில்லை. மீண்டும் போட்டி நிலைமையை ஏற்படுத்தி

வாடகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையால் சபைக்கு அந்த நிதி நட்டம் ஒன்று ஏற்பட்டிருந்தது.

(ii) உள்ளுராட்சி ஆணையாளரின் 1998 திசெம்பர் 10 ஆம் திகதி 98/3 இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் கொடகவெல வாராந்த சந்தையை வாடகை கொடுக்கும் போது வாடகையாளருடன் உடன்படிக்கை ஒன்று மேற்கொள்வதற்கு முன்னர் ஆறு மாத வாடகைக்கு சமமான தொகை அல்லது குறைந்தளவு மூன்று மாத வாடகை என ரூபா 454,080 தொகை பிணை வைப்புச் செய்ய வேண்டும் என 02 மாத பிணை என ரூபா 332,992 மாத்திரம் பெறப்பட்டிருந்தது.

(இ) கொடகவெல மற்றும் இரக்குவானை வர்த்தக கட்டிடத் தொகுதியில் கடைகளுக்கான மாதாந்த வாடகை 2009 பெப்ரவரி 17 மற்றும் 24 திகதி மாகாண பெறுமதி மதிப்பீட்டாளரின் அறிக்கையின் மூலம் திருத்தியிருந்த போதிலும் அக் கடைகளில் மாதாந்த வாடகை அதன் பிரகாரம் திருத்தி அமைக்காமல் எல்லா வருடங்களிலும் மாதாந்த வாடகை 10% மாத்திரம் அதிகரித்து மாதாந்த வாடகை அறவீடு செய்தல் நடைபெற்றுள்ளது.

(ஈ) இலங்கை குடியரசின் 2014 திசெம்பர் 19 திகதிய 1894 கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அறிவித்தல் பலகை காட்சிப்படுத்துவதற்காக கட்டணம் அறவீடு செய்யும் முறை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அறிவித்தல் பலகைகள் பொருத்தியிருந்த 11 நிறுவனங்களிடம் மாத்திரம் வருமானம் அறவிடப்பட்டிருந்தது. மேலும் இனங்காணப்பட்ட 07 நிறுவனங்களின் மூலம் காட்சிப்படுத்தப்பட்ட பலகைகளுக்காக வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் ரூபா 350,769 இற்கான வருமானம் ஒன்று சபை இழக்கும் ஆபத்து நிலை ஒன்று ஏற்பட்டிருந்தது.

(உ) இரக்குவானை பழைய வர்த்தக கடைத் தொகுதியில் இலக்கம் 24,25,29 மற்றும் 30 ஆம் இலக்க கடைகள் 2012 ஆண்டு முதல் கேள்வி பெறப்படாமையால் வாடகைக்கு கொடுத்திருக்கவில்லை. இதன் காரணமாக சபை பாரிய வருமானம் ஒன்றினை ஒவ்வொரு வருடமும் இழந்திருந்தது.

**2.3.7 நீதிமன்றத் தண்டப் பணம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நீதிமன்றத் தண்டப்பணம் அறவீடு செய்வது தொடர்பாக முறையான நிகழ்ச்சித் திட்டமொன்று செயற்படுத்தாமையால் எம்பிலிபிட்டிய நீதிவான் நீதிமன்றில் இருந்து 2014 ஆகஸ்ட் முதலும், பெள்மடுள்ள நீதிவான் நீதிமன்றில் இருந்து 2015 மார்ச் மாதம் முதலும் பலங்கொடை மாவட்ட நீதிமன்றில் இருந்து 2002 ஜுலை மாதம் முதலும் நீதிமன்ற தண்டப் பண வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இரத்தினபுரி காணிப் பதிவாளர் அலுவலகத்தில் இருந்து 2015 திசெம்பர் வரையும் எம்பிலிபிட்டிய காணிப் பதிவாளர் அலுவலகத்தில் இருந்து 2015 ஏப்ரல் முதல் திசெம்பர் வரையும் முத்திரை கட்டண வருமானம் தருவித்திருக்கவில்லை. அத்துடன் அவற்றை அறவீடு செய்வதற்காக முறையான நிகழ்ச்சித் திட்டம் ஒன்று செயற்படுத்தியிருக்கவில்லை.

(இ) முத்திரை கட்டணம் அறவீடு செய்யும் போது பட்டோலைகளின் படி உறுதிப்படுத்தப்படும் பெறுமதி மற்றும் காணிப் பதிவாளர் அலுவலகத்தில் இருந்து உண்மையாக அனுப்பப்படும் பெறுமதியிடையே ரூபா 90,250 வித்தியாசத்திற்கான காரணத்தை இனங்கண்டிருக்கவில்லை.

**03. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவத் திறமையின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிரதேச சபைக்குச் சொந்தமான JCB இயந்திரத்திற்காக 2015 ஆண்டின் போது ரூபா 548,481 இற்கான செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ் இயந்திரம் தொடர்ந்தும் பழுதடைந் நிலையில் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. மேலும்,பிரதேச சபையில் குப்பை கிடங்குகளை மூடுதல், பின்னர் குப்பை கிடங்குகள் தோண்டுதல் ஆகிய விடயங்களுக்காக பிரதேச சபையின் JCB இயந்திரத்தை பயன்படுத்த முடியாத சந்தர்ப்பங்களின் தேவையினை அடிப்படையில் வேறு JCB இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டதாகவும் அவற்றிற்காக ரூபா 176,250 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் கடுபில நடுவேஹேன என்ற காணியை துண்டுகளாக பகிர்ந்து ஏலவிற்பனை செய்தல் தொடர்பாக ஏலவிற்பனையாளர் மற்றும் பிரதேச சபை இடையே இணங்கிய உடன்படிக்கையின் பிரகாரம் மற்றும் 1986 மார்ச் 10 திகதிய 392/9 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் வெளியிடப்பட்ட விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் கட்டளைகளின் படி விற்பனை செய்யப்படும் காணியின் 10% தரைப் பகுதியொன்று அதாவது 138.47 பொது விடயங்களுக்காக காணி உறுதி ஒன்றின் மூலம் சபைக்கு உரித்தாக்க வேண்டும். எனினும் அதற்காக ஒழுங்கான காணித் துண்டு ஒன்று ஒதுக்காமல் நெருங்கிய பள்ளமான காணிப் பகுதியொன்றுடன் 78.7 பர்சஸ் காணி ஒதுக்கப்பட்டிருந்தது. மேலும் பொது வேலைக்காக குறிப்பிட்ட காணியில் 59.77 ஒதுக்கப்பட வேண்டும். எனினும் அவ்வாறு மேற்கொள்ளப்படாமையால் ரூபா 400,000 பேரளவில் பெறுமதியுடைய நட்டமொன்று ஏற்பட்டிருந்ததுடன் வரித்தொகையாக 2015 செப்தெம்பர் 15 திகதியில் உள்ளவாறு விற்பனை செய்யப்பட்ட காணித் துண்டுகள் தொடர்பாக பெறப்பட வேண்டிய தொகைகளை கணக்காய்வின் போது சுட்டிக்காட்டிய பின்னர் காணி கொடுக்கல் முடிவடைந்து 02 வருடங்களுக்க பின்னர் ரூபா 376,898 தொகை ஒன்று மீண்டும் சபை நிதியத்திற்க செலவு வைக்கப்பட்டிருந்தது.

(இ) பலவின்ன பண்ணை மற்றும் பெக்கோ இயந்திரச் சேவையில் ஈடுபடுத்தல் தொடர்பாக வருமானம் மற்றும் செலவுக்காக தனியாக வாணிபக் கணக்கு ஒன்று பேணப்பட்டிருந்ததுடன் பிரதான கணக்கிலிருந்து வாணிபக் கணக்கிற்கு மேற்கொள்ளும் செலவுகள் முற்பணம் என கணித்து கணக்கீடு செய்திருந்தது. பிரதான கணக்கில் இருந்து வழங்கியிருந்த ரூபா 704,054 இற்கான முற்பணத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மீளாய்வாண்டு இறுதி வரை வாணிப முற்பணக் கணக்கு செயற்படு நிலையில் காணப்படவில்லை. அத்துடன் வாணிபக் கணக்கில் எதிர்ப்பார்த்த குறிக்கோளை நோக்கி நெருங்குவதற்கு இயலாதிருந்தது.

(ஈ) கடன்கொடுத்தோர் பதிவேட்டின் பிரகாரம் கடன்கொடுத்தோர் மீதி தீர்க்கப்படாமை அல்லது பதிவேடு ஒன்று பேணப்படாமையின் காரணமாக 2013 மற்றும் 2014 ஆண்டுகள் தொடர்பாக ரூபா 1,461,040 இற்கான மீதியொன்று அவதானிக்கப்பட்ட போதிலும் அந்த கடனை தீர்ப்பதற்கு அல்லது பதிவேடுகளை சரிசெய்வதற்கு மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) 2013 ஆண்டின் போது சபைக்கு கிடைத்த வருமானத்தின் மூலம் பெற்றிருந்த பெறுமதி கூட்டிய வரி ஆகிய ரூபா 145,537 தொகை அவ் வருடத்தில் பெறுமதி கூட்டிய வரி செலவுக்கு சமப்படுத்தி செலுத்த வேண்டிய தொகையை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்படாமையால் மீளாய்வாண்டு இறுதி வரை வைப்புக்கள் என தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

(ஊ) இரக்குவானை வர்த்தக கடைத் தொகுதியில் கடைகளில் இருந்து மற்றும் சபைக்கு சொந்தமான காணித் துண்டுகளை வாடகைக்கு கொடுப்பதன் மூலம் கடை வாடகை மற்றும் தரை வாடகை ரூபா 179,479 தொகை நிலுவையாக உள்ளது. அந்த நிலுவை மீதிகள் தொடர்ந்தும் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.2 செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைக்காக ரூபா 113,240 தொகை பெறுமதியான அலுமாரி, மேசைகள், கதிரைகள் மற்றும் வீதி விளக்குகள் கொள்வனவு செய்திருந்தது. அக் கொள்வனவுகளுக்காக 2006 பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 2.8.4 இன் பிரகாரம் தாபனத் தலைவரினால் தொழிநுட்ப மதிப்பாய்வு குழுவொன்று நியமனம் செய்யப்பட வேண்டிய போதிலும் அதன் மூலம் கொள்வனவு செய்ய வேண்டிய பண்டங்களின் மாதிரியை இனங்காண வேண்டும். ஆனால் அவ்வாறு செய்திருக்கவில்லை. மேற்கூறிய மாதிரிகளின் பிரகாரம் நிறுவனத்திற்க தேவையான பொருட்கள் கூறுவிலை கோரப்பட்டு நிறுவனத்திற்கு உச்ச நலன் ஏற்படும் வகையில் கொள்வனவு செய்யப்பட வேண்டுமெனினும் குறைந்த விலையை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. கொள்வனவு தொடர்பாக தொழிநுட்ப மதிப்பாய்வு குழு அறிக்கைகள் மற்றும் சபையின் தொழிநுட்ப உத்தியோகத்தர்களின் அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

### 3.3 முறைசாரா கொடுக்கல் வாங்கல்கள்

கடந்த காலப் பகுதியில் சபையின் வெற்றி மற்றும் முன்னேற்றம் தொடர்பாக லங்காதீப பத்திரிகையில் மினிபுர அனுபந்தம் என சபை நிதியத்தில் இருந்து ரூபா 80,808 தொகை செலவிடப்பட்டிருந்தது. ஒரு பக்க அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டிருந்தது. அந்தக் கொடுப்பனவு 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 132 இன் படி சபை நிதியத்தை பிரயோகிக்கக் கூடிய விடயங்களின் கீழ் எடுக்கப்படாத செலவு ஒன்றாக இருந்ததால் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறி செலுத்தப்பட்டிருந்த கொடுப்பனவு ஒன்றென அவதானிக்கப்பட்டது. மேலும், அதற்காக விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்தை பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

### 3.4 மீன் சந்தைக்கான தரையினை அபிவிருத்தி செய்தல்

(அ) இரத்தினபுரி எம்பிலிபிட்டிய பிரதான பாதையில் மாதம்ப சந்தியின் அண்மையில் நாளாந்தம் அங்கீகாரம் இன்றி நடத்தப்படும் பாரிய அளவிலான மீன் சந்தைக்காக கஹவத்த பிரதேச செயலகத்தின் முன் பகுதியில் சதுப்பு நிலப் பகுதியொன்றினை அரச உடைமையாக்கிய பின்னர் அதனை அபிவிருத்தி செய்து மீன் வர்த்தக நிலையம் என அபிவிருத்தி செய்வதற்கான முதற்கட்டமாக குறிப்பிட்ட காணியை மண் நிறைத்து அபிவிருத்தி செய்வதற்கு உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சின் நிதியம், உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மண் நிரப்பும் வேலைக்காக ரூபா 1,000,000 செலவு மதிப்பீடு ஒன்று 2014 பெப்ரவரி 05 திகதி கொடகவெல பிரதேச சபையின் தொழிநுட்ப அலுவலரினால் தயாரிக்கப்பட்டு தலைவரினால் அங்கீகரிக்கப்பட்டு பின்னர் விவசாய அமைப்பு ஒன்றுடன் 2014 பெப்ரவரி 05 திகதி ரூபா 966,435 இற்கான தொகைக்கு 03 மாத காலத்திற்கான உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) 2014 செப்தெம்பர் 23 திகதி உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சில் இருந்து கிடைத்திருந்த ரூபா 1,000,000 இற்கான தொகை பிரதேச சபை நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன், 2014 செப்தெம்பர் 25 திகதி பலவின கழிவுகள் என ரூபா 270,039 தொகை கழிக்கப்பட்டு பின்னர் ஒப்பந்தக்காரருக்கு ரூபா 729,961 தொகையொன்று கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

அவ்வாறாயினும், உடன்பட்டுள்ள சங்கம் குறிப்பிட்ட வேலை மதிப்பீட்டின் பிரகாரம் டிபர் வண்டியின் மூலம் மண் எடுத்துச் செல்லப்பட்டதென நிறுவனத்தின் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் ஒருவர் மூலம் அல்லது வெளி சாட்சிகள் மூலம் உறுதிப்படுத்தப்படவில்லை. அதன் பிரகாரம் மேற்கூறிய உறுதிச் சான்றுகள் மூலம் கொடுப்பனவு செய்யப்பட்ட மொத்தத் தொகையாகிய ரூபா 10,000,000 குறிப்பிட்ட ஒப்பந்த சங்கத்தினால் மேற்கொள்ளப்படாத வேலை ஒன்றிற்காக செய்யப்பட்ட பிழையான கொடுப்பனவு ஒன்றென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 3.5 ஒப்பந்த நிருவாகம்

(அ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சு செயற்திட்டத்தின் கீழ் 2014 ஆண்டின் போது அமுல் நடத்தப்பட்ட ஊருக்கு ஊர் வீட்டுக்கு வீடு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சபையினால் அமுல் நடத்தப்படும் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட 08 நிர்மாண வேலைகளுக்காக ரூபா 11,349,433 தொகை குறிப்பிட்ட ஒப்பந்தக்காரருக்கு செலுத்த வேண்டியிருந்தது.

(ஆ) உடன்படிக்கைகள் கையொப்பமிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 1,458,095 தொகை பெறுமதியான 04 நிர்மாண வேலைகள் 2016 மே மாதம் இறுதி வரை வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.6 திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

குப்பை முகாமைத்துவம் தொடர்பாக மீளாய்வாண்டின் போது முறையான நிகழ்ச்சித் திட்டமொன்று காணப்படவில்லை. நகரத்தில் சேகரிக்கப்படும் குப்பைகள் பலவின்ன பண்ணையில் திறந்த தரைப்பகுதி ஒன்றில் கிடங்குகள் வெட்டப்பட்டு உக்கக் கூடிய உக்காத அனைத்து குப்பைகளையும் புதைத்தல் தற்போதும் நடைபெறுகின்றது. குப்பைகளை கொட்டுவதற்காக கிடங்குகள் வெட்டுவதற்காக பிரதேச சபை பெக்கோ போலவே ரூபா 176,250 தொகை செலவில் வேறு பெக்கோ இயந்திரமும் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. இதற்காக சுற்றாடல் அதிகார சபையின் அனுமதிப்பத்திரமும் பெற்றிருக்கவில்லை.

## 3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

### (அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

53 – 5625 ஆம் இலக்க மிட்சுபிசி கப் வண்டி மற்றும் 37 – 9509 இலக்கங் கொண்ட குபேடோ டிரக்டர் வண்டி சபையின் வேலைகளுக்கு அல்லது வருமானம் உழைக்கும் விடயங்களுக்கு பயன்படுத்தப்படாமல் விளைவற்று நிறுத்தப்பட்டிருந்த போதிலும் அவற்றில் 37 – 9509 இலக்கங் கொண்ட குபோட்டோ டிரக்டர் வண்டி 2015 ஆண்டின் போது ரூபா 319,880 செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டு பழுதுபார்க்கப்பட்டிருந்தது.

### (ஆ) தனதாக்கப்படாத சொத்துக்கள் முறைசாரா விதமாக உபயோகித்தல்

(i) சபையினால் நிர்மாணிக்கப்பட்டிருந்த பழைய நூலகக் கட்டிடம் பல வருட காலாக பல்வேறு நபர்களுக்கு வாடகைக்கு கொடுத்து வருமானம் உழைத்திருந்த போதிலும் கொடகவெல பிரதேச செயலகத்திற்கு சொந்தமானதெனவும் அந்த காணி பிரதேச சபைக்கு உரித்தாக்கியிருக்காமையால் அந்த காணிப் பகுதியை விடுவிக்கும் படியும் அறிவித்திருந்தது. இதன் பிரகாரம் அக் கட்டிடம் மற்றும் அது அமைந்துள்ள காணியின் உரிமை தொடர்பாக தீர்க்கப்படாமல் நீண்ட காலமாக செயற்பட்டமையால் சபைக்கு வருமானத்தை உருவாக்கும் அக் காணி மற்றும் கட்டிடத்தை சபை இழக்கும் ஆபத்து ஒன்று ஏற்பட்டிருந்தது.

(ii) பல்வேறு நிறுவனங்களில் சபைக்கு அண்மைக் காலங்களில் கிடைத்திருந்த கப் வண்டி, டிரக்டர் மற்றும் டேலர், நீர் தொட்டி, நீர் பவுசர், போடோன் டிரக்டர் வண்டி என 09 வாகனங்களுக்கான வாகனங்களின் பதிவு சான்றிதலுக்காக சபையில் காணப்படவில்லை. அவை முறையாக சபைக்கு சாட்டப்பட்டிருக்கவில்லை எனவும் அவதானிக்கப்பட்டது.

**04. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 வருடாந்த பெறுகைகள் திட்டம்**

மீளாய்வாண்டிற்கான வருடாந்த பெறுகைகள் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஒன்று நிறுவப்பட்டிருந்த போதிலும் அதற்காக போதிய வசதிகள் வழங்கி செயற்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு செயற்படுத்தாமை**

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவி செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**05. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) ஒப்பந்த நிருவாகம்
(உ) திண்மக் கழிவுப்பொருள் முகாமை